**மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,**

2001ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடரின் தொடக்கத்தில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் அன்பான புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. இக்கூட்டத்தொடர் பதினோராவது சட்டப்பேரவை நிறைவு கூட்டத்தொடர் ஆகும். இப்பேரவை இந்த ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் சிறப்பாக விவாதங்களை நடத்தி அரசின் முற்போக்கு கொள்கைகளுக்கு வடிவம் கொடுத்துள்ளது. இம்மாநிலத்தின் நலனிலும், அரசை வழிநடத்திச் செல்வதிலும் உங்களது பங்கினைப் பாராட்டுவதில் பெருமிதம் அடைகிறேன்.

3. இந்திய அரசியல் கடந்த 50 ஆண்டுகளில் பெரும் அளவிற்கு மாற்றம் அடைந்துள்ளது. இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும்

வலுப்படுத்துவதற்கு, மத்தியில் கூட்டாட்சியும் மாநிலங்களில் கூடுதல் அதிகாரங்களோடு சுயாட்சியும் அமைய அரசியலமைப்புச் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

4. ஊழலற்ற, வெளிப்படையான நிருவாகத்தை வழங்க இம்மாநில மக்கள் இந்த அரசிற்கு அளித்த முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பை மதித்து இந்த அரசு செயல்பட்டுள்ளது. அரசின் செயல்முறைகளில் ஊழலைத் தவிர்த்திட நீதியரசர் இராமானுஜம் தலைமையிலான குழு அளித்த பரிந்துரைகளின்மீது அரசு உரிய முடிவுகள் எடுத்து செயல்படுத்தியுள்ளது. ஒப்பந்தப்புள்ளி வழிமுறைகளில் ஒளிவுமறைவற்ற தன்மையைக் கொண்டுவருவதற்கான சட்டம் ஒன்றை இயற்றிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

5. இந்த அரசு சட்டம்–ஒழுங்கைப் பராமரிக்க முன்னுரிமை அளித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டங்களை நடத்தி, அவர்தம் கருத்தறிந்து மாநிலத்தில் சமுதாய நல்லிணக்கத்தைப் பேணி அமைதி காக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வெற்றி

கண்டுள்ளது. வகுப்பு மோதல்களைத் தடுப்பதற்கு நீதியரசர் மோகன் குழுவின் பெரும்பாலான பரிந்துரைகளை ஏற்று செயல்படுத்தியுள்ளது. இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளின் பயனாக, சாதி, மத வன்முறைகளினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை கடந்த இரண்டாண்டுகளில் வெகுவாக குறைந்துள்ளது.

6. காவல்துறையை நவீனப்படுத்தி, ஆங்காங்கே எழும் பிரச்சினைகள் பற்றிய தகவல்களை அறிந்து அவற்றிற்கு சுமுகமானத் தீர்வு காண உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த அரசு சட்டம்–ஒழுங்கினை நல்ல முறையில் பாதுகாத்துள்ளது. மனித உரிமைகள் மீறல் பற்றி வரும் புகார்களை விசாரிப்பதற்காக ஏற்படுத்திய மாநில மனித உரிமைகள் ஆணையம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

7. மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உணவுதானியங்கள், சமையல் எண்ணெய்கள், பயறுவகைகள், காய்கறிகள் போன்றவற்றின் விலைகள் உயராதவாறு இந்த அரசால் அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழு கண்காணித்து

வருகிறது. சுமார் ஒரு கோடியே 59 இலட்சம் குடும்பங்கள், பொது விநியோக முறையின் மூலம் நியாயமான விலையில் இன்றியமையாப் பொருட்களைப் பெற்று வருகின்றன. நடப்பு நிதியாண்டில், இந்த அரசு உணவு மானியமாக ரூபாய் 1700 கோடி வழங்க உள்ளது. கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.50 என்ற குறைந்த விலையில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், மேலே உள்ளவர்கள் என்ற வேறுபாடின்றி அனைத்து தரப்பினருக்கும் அரிசி வழங்குகின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடேயாகும். அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் உள்ளிட்ட இன்றியமையாப் பொருட்கள் விநியோகத்தில் இப்பொழுதுள்ள நடைமுறை தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். விவசாயிகள், தங்களுடைய நெல்லுக்கு நல்ல விலை பெறுவதை உறுதி செய்வதற்காக, நடப்பு சம்பா பருவத்தில், இணை கொள்முதல் முறையை செயல்படுத்தி, மற்ற எந்த மாநிலத்திலும் இல்லாதவகையில் மைய அரசு நிர்ணயித்துள்ள ஆதார விலைக்குமேல் இடைநிகழ் செலவாக குவிண்டால்

ஒன்றுக்கு 40 ரூபாய் கூடுதலாக வழங்கிவருவது இந்த மாநிலம் ஒன்றேயாகும்.

8. கடந்த இரு மாதங்களில் தமிழகத்தில் இரண்டுமுறை புயல் தாக்கியபோது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்ததன் விளைவாக, பெரும் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது. புயல் தாக்கியதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கியதோடு, புயலால் ஏற்பட்ட சேதாரங்களை சரிசெய்யவும் இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

9. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வலுவான அடிப்படைவசதி இன்றியமையாதது என்பதைக் கருத்தில்கொண்டு, இந்த அரசு மின்உற்பத்தியை அதிகரித்தல், சாலைகளைத் தரம் உயர்த்துதல், பாலங்கள் கட்டுதல், குடிநீர் வசதியைப் பெருக்குதல் ஆகிய கட்டமைப்புப் பணிகளை நிறைவேற்றி வருகிறது. இதன் காரணமாகவும் இந்த அரசு பின்பற்றிவரும் தொழில் நேயமிக்க கொள்கையின் காரணமாகவும் அதிக அளவில் தொழில் முதலீடுகளைப் பெற்று இந்தியாவின்

தலைசிறந்த மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் விளங்குகிறது.

**10.** தகவல் தொழில்நுட்பப் புரட்சி தமிழ்நாட்டில் ஆரவாரமின்றி வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இதன் பயனாக இம்மாநிலத்தில் மென்பொருள் (software) மேம்பாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கையும், மென்பொருள் உற்பத்தியும் அதன் ஏற்றுமதியும் அதிகரித்து வருகிறது. மாநிலம் முழுவதும் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கு உகந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க கண்ணாடி இழை கம்பிவடங்கள்மூலம் உயர்வேக வலையமைப்பு (Optic fibre cable network) உருவாக்குவதில் தனியார் நிறுவனங்கள் அதிக முதலீடுகள் செய்வதை அரசு ஊக்குவித்து வருகிறது. மென்பொருள் உற்பத்தி நிறுவனங்கள் சென்னை, கோயம்புத்தூர் பகுதிகளில் மட்டுமல்லாமல், மாநிலத்தின் மற்ற பகுதிகளிலும் அமைக்கப்பட்டு அப்பகுதிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கிட மதுரையிலும் திருச்சிராப்பள்ளியிலும் செயற்கைக்கோள் தரைநிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மதுரை நிலையத்துடன் இணைந்த ஓர்

இருப்பிட அமைப்பு (Point of Presence) திருநெல்வேலியிலும் உருவாக்கப்பட்டு வருகின்றது. சென்னை தரமணியில் அனைத்து வசதிகளையும் கொண்டு அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான டைடல் பூங்கா வெற்றிகரமாக செயல்பட்டுவருகிறது. இதனை அடுத்து இரண்டாவது டைடல் பூங்காவை அதற்கு அருகிலேயே உருவாக்க அரசு முடிவெடுத்துள்ளது. தற்போது இணைய நிலையங்கள் (Internet Kiosks) அனைத்து நகரங்கள் மற்றும் மாநகரங்களில் பரவலாக அமைந்துள்ளன. இத்தகைய இணைய நிலையங்கள் கிராமங்களிலும் விரைவில் அமைந்திட வழிவகுக்கப்படும். சென்னை இந்திய தொழில்நுட்பவியல் நிறுவனம் (I.I.T) உருவாக்கியுள்ள உள்நாட்டு வயர்லெஸ் தொழில்நுட்ப அடிப்படையில் கிராமங்களில் இணையம் மற்றும் தொலைபேசி தொடர்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இந்தியாவிலேயே முதலாவதாக மதுரை மாவட்டத்தில் முன்னோடித் திட்டமொன்று விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது.

**11.** உலகெங்கிலுமுள்ள மக்கள் தமிழ் மொழியைக் கற்கவும், தமிழர் வரலாறு, கலை, இலக்கியம்,

பண்பாடு பற்றி அறிந்து கொள்ளவும், வேண்டிய வாய்ப்புகளை இணையத்தின்மூலம் வழங்கிட தமிழ் இணையப் பல்கலைக்கழகம் (Tamil Virtual University) பிப்ரவரித் திங்களில் தொடங்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**12.** தகவல் தொழில்நுட்பப் புரட்சியைப் போன்று வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் உயிரியல் தொழில்நுட்பம் மிகப் பெரும் பங்கினை வரும் ஆண்டுகளில் வகிக்க உள்ளது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இந்த அரசு மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்றை அறிவித்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். சென்னை அருகே சிறுசேரி கிராமத்தில் இந்தியாவிலேயே முதன்முறையாக பெண் தொழில் முனைவோர்களுக்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று **24–11–2000** அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து உயிரியல் தகவல் தொடர்பு மற்றும்

ஜீனோமிக்ஸ் (Genomics) திட்டம் தொடங்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) அமெரிக்காவிலுள்ள ஜீனோம் டெக்னாலஜீஸ் (Genome Technologies) என்ற நிறுவனத்துடன் 5–12–2000 அன்று உடன்பாட்டு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளது. மேலும் சென்னையில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை அமைத்திட அமெரிக்காவின் புகழ்பெற்ற கார்னெல் பல்கலைக்கழகத்துடன் 15–1–2001 அன்று ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இப்பூங்கா, ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், வர்த்தகம் மற்றும் உயிரியல் தொழில் நிறுவனங்களுக்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதுடன், வெளிநாடுகளில் உள்ள புகழ்பெற்ற உயிரியல் தொழில்நுட்பப் பூங்காக்களுக்கு இணையாக பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் ஊன்றுகோலாகவும் திகழும்.

13. கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க, நவீன மருத்துவ வசதிகளைப் பெற்று மக்களுக்கு அளிப்பதற்காக, நியூயார்க்கில் உள்ள ஆல்பர்ட் அய்ன்ஸ்டின் மருத்துவ கல்லூரியின் மான்ட்போர் இன்ஸ்டிடியூட் ஆப் மினிமலி இன்வேசிவ்

சர்ஜரி அண்டு டெலிமெடிசன் நிறுவனத்துடன் (Montefiore Institute of Minimally Invasive Surgery and Telemedicine) இணைந்து தொலைத்தொடர்புவழி மருத்துவ வசதியைப் பெறுவதற்கான கூட்டுத் திட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும். தொடக்கத்தில் சமுதாய சுகாதாரப் பணிகள் குறித்து முக்கியமாக, மகளிருக்கும் சிறாருக்கும் மருத்துவ வசதியை அதிகரிப்பதும், தொலைத்தொடர்புவழி கல்வி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மருத்துவ கல்வி மற்றும் பயிற்சி அளிப்பதும் இதன் குறிக்கோளாக இருக்கும்.

14. கணினிமயமாக்கும் திட்டம், பணிகளை விரைந்து முடிக்கவும், அரசின் செயல்பாடுகளை வெளிப்படையாக்கவும், நடைமுறைகளை எளிமை–யாக்கவும் வழிவகை செய்கிறது. இதைக் கருத்தில்கொண்டு மாவட்ட நிருவாகத்தை கணினிமயமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு பல்வேறு சான்றிதழ்கள் வழங்குதல், முதியோர் உதவித்தொகை வழங்குதல் போன்ற பணிகள் 50 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இப்பணி மீதமுள்ள 156 வட்டங்களில் மார்ச் திங்கள் 2001க்குள் முடிக்கப்படும்.

பத்திரப்பதிவுத் துறையில் ஏற்கனவே கணினிமயமாக்கப்பட்ட 25 அலுவலகங்களைத் தவிர, 100 அலுவலகங்கள் இன்னும் சில தினங்களில் முழுமையாக கணினிமயமாக்கப்படும். மேலும் 200 அலுவலகங்களை கணினிமயமாக்கும் பணி வேகமாக நடைபெறுகிறது.

15. இந்தியாவில் நகர்ப்பகுதிகள் அதிகமாக உள்ள மாநிலங்களில் தமிழகம் ஒன்றாகும். இதைக்கருதி நகர்ப்புற பகுதிகளில் சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளை செய்துகொடுக்க அரசு பெருமளவில் முதலீடுகளைச் செய்துள்ளது. சென்னையில் 9 மேம்பாலங்கள், மதுரையைச் சுற்றி வட்டச்சாலை, கரூரில் ஆற்றுப் பாலம் போன்றவை பெரிய அளவிலான அடிப்படை வசதித் திட்டங்களை மேற்கொள்வதில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் திறமைக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கரூர், தஞ்சாவூர், திருவாரூர், கும்பகோணம், மயிலாடுதுறை, இராமேசுவரம், திருச்செந்தூர், உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய

நகரங்களில் பாதாளச் சாக்கடை வசதிகள் ஏற்படுத்துதல், நீர்க்கால்வாய்கள் மற்றும் ஏரிகள் ஆகியவற்றை தூர்வாருதல் போன்ற பணிகளின்மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மொத்தம் ரூபாய் 1700 கோடி செலவில் மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் ஒரு மிகப் பெரிய திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் இம்மாதம் 1ஆம் தேதி சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள்.

16. ஊரக மேம்பாட்டிற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளது. மாநிலத்தின் கிராமப்புறக் குடியிருப்புகள் அனைத்திலும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற 1996 முதல் இதுவரை 27274 குடியிருப்புகளில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாநிலத்தில் முதன்முறையாக கிராமங்களில் சிமெண்ட் கான்கிரீட் தெருக்கள் ரூபாய் 472 கோடி செலவில் 5900 கி.மீ. நீளத்திற்கு போடப்பட்டுள்ளன. இதுதவிர, ஐந்தாண்டுகளில் 22289 கி.மீ. கிராம இணைப்பு சாலைகளை தார்

சாலைகளாக மாற்றும் பணியில், இதுவரை ரூபாய் 1463 கோடி செலவில் 20900 கி.மீ. நீளத்திற்கு முடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் பிரதமர் ஊரக சாலைத் திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக 17 மாவட்டங்களுக்கு ரூபாய் 78 கோடியே 76 இலட்சம் செலவில் சாலை மேம்பாட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் எஞ்சியுள்ள மாவட்டங்களுக்கும் இத்தகைய திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

17. இந்த அரசு அறிமுகப்படுத்திய வருமுன் காப்போம் திட்டத்தின் வாயிலாக கிராமங்களுக்கே மருத்துவ நிபுணர்கள் சென்று கிராம மக்களுக்கு, குறிப்பாக வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு மருத்துவ வசதி அளித்து வருகின்றனர். இதுவரை 8481 முகாம்களில் 84.58 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். இவர்களுக்கு ரூபாய் 4 கோடியே 58 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் இலவசமாக அளிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் பெறப்பட்டுள்ள தகவல்கள், பொதுமக்களை பாதிக்கும் நோய்கள் பற்றிய

விவரங்களை அளிப்பதோடு எதிர்காலத்தில் தடுப்பு நடவடிக்கை எடுக்கவும் வழிவகை செய்யும்.

**18.** கிராம மக்களின் வாழ்க்கையுடன் கால்நடைகள் தொடர்புடையவை என்பதைக் கருத்தில்கொண்டு இந்த அரசு, தொலைதூர கிராமங்களில் கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை அளிக்க கால்நடைப் பாதுகாப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 4570 முகாம்களில் ஒரு கோடியே ஏழு இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, ரூபாய் ஒரு கோடியே 94 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

**19.** ஊரக–நகர்ப்புற பொருளாதாரங்களை இணைக்கும்வகையில் இந்த அரசு உழவர் சந்தை, பூமாலை போன்ற திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. உழவர்களுக்கு ஆதாயத்தையும், நுகர்வோருக்கு பலனையும் கிடைக்கச் செய்வதில் உழவர் சந்தைகள் பெரும்பங்கு ஆற்றுகின்றன. 14–11–1999

முதல் இதுவரை படிப்படியாக தொடங்கப்பட்டுள்ள 100 உழவர் சந்தைகள்மூலம் ரூபாய் 160 கோடி மதிப்புள்ள காய்கறிகள் விற்பனையாகியுள்ளன. பூமாலைத் திட்டம், கிராமப்புற கைவினைஞர்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு உரிய விலையைப் பெறுவதற்கு வழிவகுத்துள்ளது.

20. இந்த அரசின் முக்கிய திட்டங்களில் ஒன்றான நமக்கு நாமே திட்டம் மக்களின் பேராதரவைப் பெற்றுள்ளது. அரசின் முதலீடான ரூபாய் 98 கோடியே 15 இலட்சத்துடன், ரூபாய் 52 கோடியே 76 இலட்சம் அளவிற்கான பொதுமக்களின் பங்கும் இணைந்து நமக்கு நாமே திட்டம் மக்களிடையே, மக்களால், மக்களுக்கான ஒரு திட்டமாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்தஅரசு ரூபாய் 694 கோடி செலவில் 844 கிராமங்களில் கல்வி, சாலை, குடிநீர், பொதுச் சுகாதாரம் முதலிய அனைத்து அடிப்படை வசதிகளையும் இதுவரை அளித்துள்ளது. மற்றும் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொகுதிக்கும் ரூபாய் 77 இலட்சம் நடப்பு

நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பணிகள் விரைவாகவும் செம்மையாகவும் நடைபெறுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறேன். சாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் இந்த அரசு பெரியார் நினைவு சமத்துவபுரங்களை அமைத்து வருகிறது. இதுவரை **98** சமத்துவபுரங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. மேலும் **20** சமத்துவபுரங்கள் விரைவில் தொடங்கப்பட தயார் நிலையில் உள்ளன. தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி மேம்படுத்துவதற்கான திட்டங்களை வகுப்பதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் தலைமையிலான உயர்நிலை ஆணையத்தின் பரிந்துரைகள்மீது இந்த அரசு முனைப்புடன் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**21.** இந்த அரசின் பல திட்டங்கள் விவசாயிகளை மையமாக வைத்து வகுக்கப்படுகின்றன. உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு, விவசாயக் குடும்பங்களுக்கு போதுமான ஆதாயம் கிடைக்கச் செய்தல், நிலத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்

போன்றவற்றை உறுதி செய்யும் பொருட்டு தரிசு நிலங்களைச் சீரமைத்தல், மண்வள–நீர்வள ஆதாரங்களைப் பேணி நிருவகித்தல் ஆகியவற்றுக்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு, ஆறுகள், கால்வாய்கள், ஏரிகள், வடிகால்கள் ஆகியவைகளில் தூர்வாரும் பணிகள் அடங்கிய ஒரு பெருந்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1997–98ஆம் ஆண்டு முதல் இதுவரை மொத்தம் ரூபாய் 178 கோடியே 65 இலட்சம் செலவில் 907 ஏரிகள், 10637 கி.மீ. நீளத்திற்கு ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்கள் ஆகியவற்றில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பணி மேலும் தொடரும். 2000–2001ஆம் ஆண்டில் 30,000 எக்டேர் நிலப்பரப்பில் தரிசு நில மேம்பாட்டுப் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**22.** பாசனத்திறன் அதிகரிப்புப் பணிகளை மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல், பாசன ஆதாரங்களை சரிவரப் பராமரிப்பதும் இன்றியமையாதது ஆகும். ஆகவே, பாசன நீர் பயன்படுத்தும் விவசாயிகளின் குழுக்கள் உருவாக்கப்பட்டு பாசனத்தை இயக்கவும், பராமரிக்கவுமான பொறுப்பு இக்குழுக்களுக்கு

அளிக்கும்வகையில் சட்டம் நிறைவேற்றப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவீர்கள். இதனையடுத்து இக்குழு தமக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளை மேற்கொள்வதற்கு, நிதியுதவி உட்பட அனைத்து உதவிகளையும் அரசு உடனடியாகச் செய்ய உள்ளது.

**23.** ஏற்கனவே இந்த அரசு அறிவித்தவாறு அமைப்பு சாரா தொழிலாளர் நலனுக்காக 'தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்' ஒன்றை அமைத்து 60க்கு மேற்பட்ட பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பிற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் அவர்களின் நலனுக்காக தனித்தனியாக பதினோரு வகையான வாரியங்களும் அமைக்கப்பட்டுள்ளன. 'சமூகப் பாதுகாப்பு வைப்பு நிதி' ஒன்று உருவாக்கப்பட்டு, அதன் மூலம் இந்த தொழிலாளர் நலத் திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்படும்.

**24.** பேரறிஞர் அண்ணாவின் அன்னையார் பங்காரு அம்மையார் நினைவாக அமைக்கப்பட்டுள்ள

மகளிர் திட்டத்தின் செயல்பாடு, மனநிறைவளிக்கும் வகையில் உள்ளது. பெண்களுக்கு சமூக பொருளாதார உரிமை அளிக்க வகை செய்கின்ற இத்திட்டம், 28 மாவட்டங்களைச் சேர்ந்த கிராமப் பகுதிகளில் தொடங்கப்பட்டு பேரூராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, இதுவரை 58,391 சுய உதவி குழுக்கள்மூலம் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பயனடைந்து வருகின்றனர். மகளிருக்கென்றே இந்த அரசு மாநகராட்சிப் பகுதிகளில் அறிமுகம் செய்த 'சேமிப்புடன் இணைந்த சிறுவணிகக் கடன் திட்டம்' நகராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு இதுவரை ஒரு இலட்சத்து 59 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில் ரூபாய் 20 கோடியே 2 இலட்சம் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது.

25. ஐந்தாம் வகுப்புவரை சிறார்கள் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கும் தொடக்கக் கல்வித் திட்டத்தை இந்த அரசு முனைப்பாக செயல்படுத்தி வருகிறது. சிறார்கள் அனைவரும் ஆர்வத்துடன் பள்ளியில் சேரவும் தொடர்ந்து கல்வியைப் பயிலவுமான 'மகிழ்வுடன் கல்வி கற்கும் முறை' ஆரம்பப்

பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முன்னூறுக்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் தொடக்கப்பள்ளி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, தமிழகத்திலுள்ள அனைத்து அரசு மேனிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் நடப்பு ஆண்டில் **60,851** மாணவர்கள் கணினிக் கல்வி பெற்று வருகின்றனர். அரசுக் கல்லூரிகளின் மாணவர்களுக்கும் கணினிக் கல்வித் திட்டம் இந்த ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது.

**26.** ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரது சமூக உரிமைகளைப் பாதுகாப்பதில் இவ்வரசு மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறது. இட ஒதுக்கீடு பற்றி வெள்ளை அறிக்கை ஒன்றை அளித்ததோடு மட்டுமில்லாது, நிரப்பப்படாமல் உள்ள அனைத்து பின்னடைவுப் பணியிடங்களையும் ஐந்து ஆண்டுகளுக்குள் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எங்கெல்லாம் நேரடி

நியமனங்களுக்கு விதிமுறைகள் வழிவகுக்கின்றனவோ அங்கெல்லாம் பின்னடைவுப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு தலைமைச் செயலாளர் தலைமையிலான குழுவினால் இப்பணியின் முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இட ஒதுக்கீடு பெறும் பிரிவினருக்கான பின்னடைவு பணியிடங்கள் மொத்தம் 11,264ல் நடப்பாண்டில் நிரப்பப்பட வேண்டிய இலக்கு 2250. இதுவரை ஏ, பி, சி, டி என்ற நான்கு பிரிவுகளிலும் 2374 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இதில் ஆதிதிராவிடர் 1467 பேர், பழங்குடியினர் 217 பேர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 690 பேர் என்று தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

27. மாநிலத்தின் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை பொறுப்புகளை ஆற்றுவதில் அரசுப் பணியாளர்களின் முக்கியமான பங்கை கருத்தில்கொண்டு, நிதி நெருக்கடி இருந்தபோதிலும், பணியாளர்களுக்கும், ஓய்வூதியம் பெறுவோருக்கும் முன் தேதியிட்டே மத்திய அரசுக்கு இணையான சம்பள வீதங்களை இந்த அரசு வழங்கியதோடு

பணியாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட அகவிலைப்படி மற்றும் பொங்கல் ஊதியக்கொடை ஆகியவற்றையும் அளித்துள்ளது.

**28.** இந்த அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் சாதனைகளையும், நான் உங்கள் முன் விவரித்துக் கூறியுள்ளேன். இந்த உயரிய செயலாக்கங்களை நாம் பெருமிதத்துடன் கூறும் அதே நேரத்தில் இதுபோன்ற வளர்ச்சியை இம் மாநிலம் தொடர்ந்து அடைவதற்குப் பாடுபடுவோமாக.

**29.** இவை குறித்த உங்களின் விவாதம், நம்முடைய ஜனநாயக மரபிற்கும் பாரம்பரியத்திற்கும் உகந்த வகையில் அமையும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் நான் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**வணக்கம்**

**ஜெய்ஹிந்த்**